Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C. 153/2022** |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW** 22 |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

Name : **ராமச்சந்திரன்**

Father Name : உலகநாதன்

Village :

Taluk :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.10.2024.

(எதிரிகள் 2, 3 ஆஜர், எதிரி 1 ஆஜர் இல்லை. 1–ஆம் எதிரி சார்பில் BNSS பிரிவு – 355 –ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 05.03.2021–ம் தேதி நான் இராமநாதபுரம் கேணிக்கரை காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனைக்கு சென்று

சவக்கிடங்கில் இருந்த கொலையுண்டு இறந்துபோன இராமநாதபுரம் வஉசி நகர் இருளாண்டி மகன் பனையடியான் என்பவரது பிரேதத்தை பார்வையிட்டு அங்கிருந்த கொலையுண்டு இறந்துபோன பனையடியானின் உடன் பிறந்த தம்பியான இருளாண்டி மகன் ரவி என்பவரை விசாரித்து அவர் கொடுத்த புகார் மனுவை பெற்று கேணிக்கரை காவல் நிலையம் வந்து அன்று இரவு 07.30 மணிக்கு புகார் மனுவின் தன்மைக்கேற்ப இராமநாதபுரம் கேணிக்கரை காவல் நிலைய குற்ற எண். 150/2021–ல் இதச பிரிவு 294(பி), 323, 302–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகார் மனு **அ.சா.ஆ.15/அ.சா.22**, முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.16/அ.சா.22**. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் மனுவை இராமநாதபுரம் நீதித்துறை நடுவர் எண்–2 நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். அதன் நகல்களை சம்மந்தப்பட்ட காவல் உயர் அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன். மேலும் அதன் ஒருநகலை கேணிக்கரை பொறுப்பு காவல் ஆய்வாளர் அவர்கள் பார்வைக்கு மேல்விசாரணைக்காக வைத்தேன். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:–

இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனை கேணிக்கரை காவல் நிலையத்திலிருந்து சுமார் 3 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. காவல் நிலையத்திற்கு குற்றம் பற்றிய ஒரு தகவல் வந்தால் அந்த தகவலை நிலைய நாட்குறிப்பில் பதிவு செய்வோம். தொலைபேசி மூலமாக இறப்பு சம்மந்தமாக ஒரு தகவல் வந்தது. அது மருத்துவமனை புறக்காவல் நிலையத்தில் இருந்து வந்தது. அந்த தகவல் மாலை 06.30 மணிக்கு வந்தது. தகவல் கிடைத்த உடன் நான் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு போனேன். நான் மருத்துவமனைக்கு போய் சேர்ந்தபோது மாலை சுமார் 06.45 மணி இருக்கும். அப்போது என்னுடன் யாரும் வரவில்லை, நான் தனியாகத்தான் சென்றேன். நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பிறகுதான் ஆய்வாளருக்கு தெரிவித்தேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பிறகு உயர் அதிகாரிகளுக்கு அதன் நகலை அனுப்பி வைத்தேன். ஆய்வாளருக்கு தகவல் தெரிவித்தேன். புகாரை புகார்தாரர் மருத்துவமனையில் எழுதி வைத்திருந்தார். கேணிக்கரை காவல் நிலையத்திலிருந்து இராமநாதபுரம் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றம் சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம் இருக்கும். சுமார் 15 நிமிடத்தில்

நீதிமன்றத்திற்கு வந்துவிடலாம். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உடன் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்திற்கு போகவில்லை என்றும், கண்ணுற்ற சாட்சி ஒருவர் வேண்டும் என்பதற்காக பின்னிட்டு ரவி என்பவர் புகார் கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக ஜோடித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**